விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 336 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 04 வியாழக்கிழமை (20.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### தேசிய இனப் பிரச்சினைக்கான
# தீர்வு தேடும் பொறிமுறை
# ஜனவரியில் ஆரம்பமாகும்

### தமிழரசுக் கட்சியினரிடம் ஜனாதிபதி உறுதி

*(கொழும்பு)*

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு காணும் பொறிமுறை ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியினரிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்தார்.



*(16ஆம் பக்கம் பார்க்க)*

### திருகோணமலை விவகாரத்தில்
## இனவாதத்தைத் தூண்ட பல தரப்பு முயற்சி
### அநுரவிடம் தமிழரசுக் கட்சி

(கொழும்பு)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை வைத்து இனவாதத்தைத் தூண்ட பல தரப்பினர் முயற்சி 16ஆம் பக்கம் பார்க்க

### இனவாதத்துக்கு எதிராக
## அரசின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்போம்
### அநுரவிடம் தமிழரசுக் கட்சி

(கொழும்பு)

இனவாதத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கைக்கு ஒத்துழைப் 16ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம்
### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்
### தமிழரசுக் கட்சியினரிடம் அநுர

(கொழும்பு)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவதானம் செலுத்துவேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக் 16ஆம் பக்கம் பார்க்க

## பிரான்ஸிலிருந்து நாடு திரும்பிய இளைஞன் கொலை
### நெல்லியடியில் சம்பவம்



(கரணவாய்)

பிரான்ஸ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய யாழ்ப்பாண இளைஞன் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி தூதாவளை வீதியில் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீத்த வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தமிழர்கள் புலம்



பெயர்ந்து வாழும் தேசமெங்கும் வருடந்தோறும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இந்த வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தலைத் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### 70 ஆயிரம் பேரை
## அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி

(கொழும்பு)

அரச சேவை, மாகாண அரச சேவை மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்ட ரீதியான சபைகளுக்கு சுமார் 70,000 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சி கிழக்கில்
## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினர் 15ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலையில் விகாரை கட்டுமானங்களை நிறுத்துக
### திருகோணமலை நீதிவான் விகாராதிபதிக்கு உத்தரவு

(திருகோணமலை)

திருகோணமலை கோட்டை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி விகாரைக்குச் சொந்தமான தற்காலிக கட்டிடத்தின் தற்போதைய கட்டுமானங்களை இத்துடன் நிறுத்தவும். புதிய கட்டுமானங்கள் அல்லது மாற்றங்கள் எதையும் செய்யக் கூடாது என்றும் திருகோணமலை 15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் நெற்பயிரில் இலை மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கம்

## விவசாயிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நெற்பயிரில் இலை மடிச்சுக் கட்டி நோய்த் தாக்கம் உணரப்படும் நிலையில் விவசாயிகள் உரிய காலப்பகுதியில் அருகிலுள்ள விவசாய போதனா ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெறுமாறு வட மாகாணப் பிரதி விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மழை பெய்த பின் காற்றோடு சேர்ந்து குளிருடனான காலநிலை அதிகமாக நிலவுவதால் நெற்பயிரில் இலை மடிச்சுக் கட்டி நோய்த் தாக்கம் ஆரம்பித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் குறித்த நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பகுதிகளிலும் நோய்த் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் நிலவுகின்றன.

ஆகவே விவசாயிகள் குறித்த நோய்த் தாக்கத்தை ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவதற்கு அருகிலுள்ள விவசாய போதனாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனையைப் பெற்று கிருமிநாசினிகளை பயன்படுத்தவேண்டும் என்றார். (ம-7,104)

# கண்ணீர் அஞ்சலி

பதிவாளர் நாயக திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.ப.றமேஷ் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் கலாபூஷணம்

**க.ப.பரராஜசிங்கம்**
**(பப்பா)**



இசை நாடகக் கலைஞர், பௌராணிகர்,
அகில இலங்கை சமாதான நீதிவான்

மலர்வு : 17.10.1948
உதிர்வு : 18.11.2025

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்.....

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வடக்கு வலய பிரதிப்பதிவாளர் நாயகத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் காணி மாவட்ட பதிவக உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம்.

(5961)

# யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வீட்டில் தனித்து வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் முழுவதும் வீடு பூட்டியிருந்ததை அவதானித்த அயலவர்கள் நேற்று மாலை வீட்டினுள் நுழைந்து பார்வையிட்ட போது அவர் அசைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து நோயாளர் காவு வண்டி, பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்காவு வண்டி மரணத்தை உறுதி செய்து திரும்பியுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், கிராமசேவகர் ஆகியோர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் இன்று உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (ம-7)

# நீதிமன்ற நடவடிக்கையின் பின்னரே பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

எதிர்காலத்தில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவது குறித்து கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

பட்டதாரிகள் சங்கம் மற்றும் அகில இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆகியவற்றுடன் நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றச் செயல்முறை முடிந்தவுடன், தற்போதுள்ள சட்டக் கட்டமைப்புக்குள் மட்டுமே அனைத்து நியமனங்களும் கட்டாயமாக மேற்கொள்ளப்படும் என்பதை பிரதமர் தெளிவுபடுத்தினார்.

ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான சில வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், இதன் காரணமாகவே பட்டதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு
03 - 06 - 1968



உதிர்வு
17 - 11 - 2025

## கமலதாசன் அருள்மொழி

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலதாசன் அருள்மொழி அவர்கள் கடந்த 17.11.2025 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோண் மற்றும் கார்மேல் மரியை தம்பதியரின் அன்பு மகளும் (யோண் மாஸ்டர், சென்.நீக்கிளாஸ் நாவாந்துறை) காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை இராயப்பு யசிந்தா தம்பதியரின் மருமகளும் கமலதாசன் (இத்தாலி) அவர்களின் அன்பு மனைவியும் றெஜினி தானியா (மருத்துவ பீடம் 3ம் வருடம்), நிம்சி சர்மிதா (A/L, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவரான மேரி வெண்ணிலா மற்றும் ஆன் அன்பரசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிறேசியன், வரதராஜன் - ஜெயசூரியா, புஷ்பராசா - வரதராணி, அலெக்சாண்டர் - அன்ரனிற்றா, ஜெயந்தன் - ராணி, பிறைனர் - கொன்சலா, பொமிக்கோ - ரூபினா ஆகியோரின் மைத்துனியும் வின்சென் டி போல் - ஜெசி பற்றிமா, மேரி றோஸ்- லொயலா, பிலோமினா- சிங்கராயர், பெத்தோல்டா - டக்ளஸ், மேரி பிரிட்ஜட், பொமிக்கோ- றுபினா, றீற்றம்மா- துரைசிங்கம், பிரான்சிஸ் - அன்னமலர், கொறுதல் - கெனியூட், எமிலியானுஸ் - ரஞ்சிதம் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை 21.11.2025 வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.02, சென்.ஜேம்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
[illegible]

(5960)

# மரண அறிவித்தல்

மலர்வு
02 - 05 - 1947



உதிர்வு
19 - 11 - 2025

## சண்முகநாதன் கமலகுமாரி

வதிரி படப்பிடி கமலதாரகையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கமலகுமாரி அவர்கள் நேற்று 19.11.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செங்கமலம் தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - லக்சுமியின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் கவிதா, சதீஸ், சர்மிளா, காலஞ்சென்ற சாளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மலிங்கம், லக்சாந்தி ஆகியோரின் மாமியாரும் வருணன், தாருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கமலேந்திரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஆனந்தராசா, கீதாமணி, சுதாகரன் ஆகியோரின் மைத்துனியும் தேனிலனின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20.11.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
077 696 5085, 075 796 5085

(C-4370)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரங்கள் அழிக்கப்பட்டாலும் உண்மையை வெளிக்கொணர்வோம்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி சூளுரை



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஆதாரங்கள் அழிக்கப்பட்டிருந்தாலும் அந்த படுகொலைக்குப் பின்னால் உள்ள உண்மையை வெளிக்கொணர்வதை அரசாங்கம் நிறுத்தாது என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, முக்கிய அறிக்கைகளின் பக்கங்கள் கிழித்தெறியப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் புதிய ஆதாரங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். எனவே ஆதாரங்கள் அழிக்கப்பட்டாலும் உண்மையை வெளிக்கொணர்வோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். மேலும், சிஐடி தலைவர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையை வெளிக்கொணர இரவும் பகலும் உழைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து அவர்கள் விரைவில் உண்மையை வெளிப்படுத்துவார்கள் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (நி)

# தங்காலை வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற சூட்டு சம்பவம்

## தம்பதிகள் உயிரிழப்பு

(தங்காலை)

தங்காலை - உணா கூருவ வாவிக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தம்பதியினர் உயிரிழந்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட இருவரும் வெளிநாட்டில் வசிக்கும் போதைப்பொருள் கடத்தல்காரரான உனகுருவவின் நெருங்கிய உறவினர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்டியாகொட - கிரலகஹவெல பகுதியில் ஒரு பெண் சுட்டுக் கொல்லப்பட்ட 24 மணி நேரத்திற்குள் இந்த துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

தங்காலை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இருவரும் 68, 59 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. இருவரும் உனகுருவ சாந்தவின் மாமா மற்றும் அத்தை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் கைவிடப்பட்ட நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் செலுத்தி வந்த உந்துருளி பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

சீனிமோதர மற்றும் தங்காலையில் மூன்று பாரவூர்தியிலிருந்து பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் உனகுருவ சாந்தவிற்கு சொந்தமானது என்பதும் தெரியவந்துள்ளது.

இருப்பினும், துப்பாக்கிச் சூடு நடத்திய தரப்பினர் யார் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மேலும் உனகுருவ சாந்தவுக்கும் கரந்தெனியே சுத்தாவுக்கும் இடையே சிறிது காலமாகத் தகராறு இருந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# மூடுபனியால் திருப்பி விடப்பட்ட விமானங்கள்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை தரையிறங்க திட்டமிடப்பட்ட மூன்று சர்வதேச விமானங்கள், அடர்த்தியான மூடுபனி காரணமாக, தெரிவுநிலை கணிசமாகக் குறைந்ததால் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டன.

இவ்வாறு திருப்பி விடப்பட்ட விமானங்களில் சீனாவின் குவாங்சோவிலிருந்து வந்த UL-881 விமானமும், சவுதி அரேபியாவின் ரியாத்திலிருந்து வந்த UL-266 ஆகிய விமானமும் அடங்கும்.

பின்னர், விமானப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மூடுபனி தணிந்ததால், விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் தரையிறங்க முடிந்தது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயணிகள், பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், தெரிவுநிலை மேம்பட்டவுடன் வழக்கமான செயற்பாடுகள் மீண்டும் தொடங்கப்பட்டதாகவும் விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (நி)

# எதிர்ப்பு பேரணியில் பங்கேற்பதாக மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 21ஆம் திகதி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்துள்ள பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்துகொள்ளவுள்ளார்.


தனது பிறந்தநாளை முன்னிட்டு ஆசீர்வாதம் பெறுவதற்காக கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்தபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக இந்த பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்க மாட்டார் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாராளுமன்ற விவகார குழுவிலிருந்து விலகிய நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற விவகாரக் குழுவிலிருந்து விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, காலியாக உள்ள இடத்தை நிரப்ப பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நியமனத்தை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போதைப்பொருள் சுற்றிவளைப்பு 865 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டின் போதைப்பொருள் சுற்றி வளைப்பின் போது 865 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது நாடளாவிய ரீதியில் 867 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, 20 கிலோ 616 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 44 கிலோ 508 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 6 கிலோ 914 கிராம் கஞ்சா போதைப் பொருளும், 28 225 கஞ்சா செடிகளும், 077 கிராம் குஷ் போதைப்பொருளும், 028 கிராம் ஹசீஸ் போதைப் பொருளும், 472 மாத்திரைகளும், 209 மதனமோதக மாத்திரைகள், 4 கிலோ 484 கிராம் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.


கைதுசெய்யப்பட்டவர்களில் 30 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ‘மூன்றாண்டுகள் கடும் உழைப்பை வழங்குவேன் தேசிய அணியில் இடம்பிடிப்பேன்’

## ஈராண்டுகளுக்கு முன்னர் சொன்னதை செய்து காட்டிய யாழ் மண்ணின் மைந்தன்




பாகிஸ்தானில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 முத்தரப்புத் தொடருக்கான இலங்கை தேசிய ஆடவர் அணியில் இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக ஶ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.


ஶ்ரீலங்கா கிரிக்கெட் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் தொடரின் போது தசைப்பிடிப்பினால் பாதிக்கப்பட்ட வனிந்து ஹசரங்க இன்னும் முழுமையாகக் குணமடையாத நிலையில், அவருக்குப் பதிலாக வியாஸ்காந்த் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

தற்போது கட்டாரில் நடைபெற்று வரும் வளர்ந்துவரும் நட்சத்திரங்களுக்கான ஆசியக் கிண்ண தொடரில் இலங்கை “ஏ” அணிக்காக விளையாடி வரும் வியாஸ்காந்த், அங்கிருந்து நேரடியாகப் பாகிஸ்தானுக்குப் பயணிக்கவுள்ளார்.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்த முத்தரப்புத் தொடரில், தனது முதல் போட்டியில் இன்று வியாழக்கிழமை இலங்கை அணி சிம்பாப்வே அணியை எதிர்த்து விளையாடவுள்ளது. (3)

## முத்தரப்பு ரி-20 முதல் போட்டியில் பாகிஸ்தான் திரில் வெற்றி!



இலங்கை, பாகிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

ராவல்பிண்டியில் இடம்பெற்ற குறித்த போட்டியில் பாகிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகள் மோதின.

இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணியின் சார்பில் பிரையன் பென்னட் 49 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பில் மொஹமட் நவாஸ் 2 விக்கெட்டுகளை கைப்பற்றியதுடன், ஷஹீன் அஃப்ரிடி, சல்மான் மிர்சா, சைம் அயூப் மற்றும் அப்ரார் அஹமட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து 148 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை கடந்தது. (3)

## ஸ்கொட்லாந்து கால்பந்து அணியின் 28 வருட கனவு நனவானது!



ஸ்கொட்லாந்தின் ஹாம்டன் பார்க்கில் நடைபெற்ற உலகக் கிண்ண ஐரோப்பிய தகுதிகாண் சுற்று போட்டியில் டென்மார்க்கை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, 28 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்கொட்லாந்து உலகக் கிண்ண தொடருக்கு தகுதி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் ஸ்கொட்லாந்து மெக்டோமினே அடித்த ஒரு அசாதாரண கோலுடன் விறுவிறுப்பாகத் தொடங்கிய ஆட்டத்தில், ஸ்கொட்லாந்து இரண்டு முறை முன்னிலை பெற்றாலும், டென்மார்க் அணியின் ராஸ்மஸ் ஹாய்லுண்ட் (பெனால்டி) மற்றும் பாட்ரிக் டோர்ஜ்ஃவின் கோல்கள் மூலம் இரண்டு முறையும் சமன் செய்தது.

90 நிமிட முடிவில் 2-2 என சமநிலையுடன் இருந்தபோது, டென்மார்க்கின் ராஸ்மஸ் கிறிஸ்டென்சன் சிவப்பு அட்டை பெற்று வெளியேறியது ஸ்கொட்லாந்துக்குச் சாதகமானது.

மிகவும் பரபரப்பான கூடுதல் நேரத்தில், முதலில் கீரின் டீர்னி ஒரு பிரமிக்க வைக்கும் தூர இலக்கு கோலை அடிக்க, அதனைத் தொடர்ந்து கென்னி மெக்லீன் கோல் அடித்து ஸ்கொட்லாந்தின் வெற்றியை மிகவும் நம்பமுடியாத வகையில் உறுதி செய்தார்.

இந்த வெற்றியின் மூலம், ஸ்கொட்லாந்து அடுத்த கோடையில் அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோவில் நடைபெறவிருக்கும் 2026 உலகக் கிண்ணத்துக்கான பங்கேற்பை உறுதிசெய்துள்ளது. (3)

## டெஸ்டில் புதிய சகாப்தம் படைத்த பங்களாதேஷ் வீரர் ரஹீம்

முஷ்பிகுர் ரஹீம் பங்களாதேஷ் அணிக்காக 100ஆவது டெஸ்டில் விளையாடும் முதல் வீரர் என்னும் வரலாறு படைத்துள்ளார்.

அயர்லாந்து அணிக்கு இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் துடுப்பாட்டம் செய்து வருகிறது.

இப்போட்டி மூத்த வீரர் முஷ்பிகுர் ரஹீமிற்கு 100ஆவது டெஸ்ட் ஆகும். இதன்மூலம் பங்களாதேஷ் அணிக்காக 100ஆவது டெஸ்டில் விளையாடும் முதல் வீரர் எனும் சாதனையை அவர் படைத்துள்ளார்.

முஷ்பிகுர் ரஹீம் இதுவரை 182 இன்னிங்ஸ்களில் 12 சதங்கள், 27 அரைசதங்களுடன் 6,351 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 3 இரட்டை சதங்கள் அடங்கும். இவரது அதிகபட்ச புள்ளிகள் 219 ஆகும். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டெங்கு நோய் தாக்கம்!

## யாழில் இதுவரை 1220 பேர் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பருவ மழைக்கு பின்னர் டெங்கு நோயின் தாக்கம் சடுதியாக அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிகிறது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தின் இது வரையான கால்ப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் 1220 பேர் டெங்கு நோயுடன் இனங் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதத்தில் 73 நோயாளர்களும், ஒக்ரோபர் மாதத்தில் 127 நோயாளர்களும், நவம்பர் மாதத்தின் நேற்று வரையான காலப் பகுதியில் 130நோயாளர்களும் டெங்கு நோயுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த வருடம் இரண்டு மடங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகள் நுளம்புக் குடம்பிகளினதும், நிறையுடலிகளினதும் செறிவு அதிகரித்து செல்வதை சுட்டிக்காட்டுகின்றன.


எனவே இந்த சூழ் நிலையில் யாழ் மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியமாகின்றது.

பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், வேலைத்தளங்களிலும், பாடசாலைகளிலும், உயர் கல்வி நிறுவனங்களிலும், பொதுஇடங்களிலும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும். உங்கள் வீடுகளிலும் வீட்டுச் சுற்றாடலிலும் உள்ள நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய கொள்கலன்களை சேகரித்து உள்ளூராட்சி மன்றங்களின் கழிவகற்றல் வாகனங்களிடம் ஒப்படைக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களிடமிருந்து கொள்கலன்களை சேகரிக்கும் விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் தமது வீடுகளில் நீர் சேகரித்து வைக்கும் பிளாஸ்ரிக் வாளிகளையும் தண்ணீர் தொட்டிகளையும் அடிக்கடி நீரை மாற்றுவதுடன் உட்புற சுவர்களை உரஞ்சி துப்பரவு செய்ய வேண்டும். நீர் சேகரித்து வைக்கும் கொள்கலன்களை நுளம்புகள் முட்டையிடாதவாறு மூடி வைக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை உங்கள் வீட்டு சுற்றாடலை சுற்றி பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களை அழிக்க வேண்டும்.

இக்காலப்பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் பூரண ஓய்வில் இருக்க வேண்டும். காய்ச்சல் இருக்கும் போது பரசிற்றமோல் வில்லைகளை உட்கொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டும். தற்போது யாழ் மாவட்டத்தில் வைரஸ் காய்ச்சல், சிக்கின் குனியா, டெங்கு ஆகிய நோய்களின் பரம்பல் காணப்படுகிறது. இந்த சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்பட்டால் தகுந்த மருத்துவ ஆலோசனையை உரிய நேரத்திலேயே பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (நி)



தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி ஞானாசிரியர் விருது வழங்கும் விழா ஆழியார் அறிவுத்திருக்கோவிலில் அண்மையில் இடம்பெற்றது.

இவ் விழாவில் உலக சமுதாய சேவா சங்க தலைவர் பத்மஸ்ரீ அருள் நிதி எஸ்.கே.எம் மயிலானந்தன் அவர்களால் யாழ்.கோவை மன வளக்கலை மன்ற அறக்கட்டளை தலைவர் பேராசிரியர் அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களுக்கு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.


**யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)**
**இல 52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணம்**

1.பதவி வெற்றிடம் (வெளிவாரி)

**எமது சமாசத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

பதவி :- அச்சு இயந்திர இயக்குனர் (ஓவ்செற்)
குறியீட்டு இல :-328/14
சம்பள அளவுத்திட்டம் :-32900.00-490x10-550x10-710x10-50400.00
(சுற்று நிரூபம் 02/2025(1) இன் படி)
கூ.வே.ஆணைக்குழு சுற்றுநிரூபத்திற்கமைய வாழ்க்கை செலவு கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வெற்றிடம் :-01

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
(அ) கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்.
அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆம் தர கல்விச் சான்றிதலுடன் 02 வருட அச்சியந்திர வேலை தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
வயது : 18- 45

ஏனைய விடயங்கள் -
1. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2.கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபத்திற்கமைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும், மற்றும் படிகள் வழங்கப்படும்.
3.தகைமைச் சான்றிதழ்களின் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4.தகைமையற்ற, சரியாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்
5.விண்ணப்ப முடிவுத் திகதி 08.12.2025
மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சமாச அலுவலக நேரத்தில் விண்ணப்பபடிவங்களை ரூ 50.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட ப்னை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து), இல 52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குளி,யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C-4369)
**திரு சி.சுதர்சன், தலைவர் தொலை பேசி இல 021 222 5072**


# நாமல் ராஜபக்சவின் சட்டமாணி பட்டம் போலியானது

## சபையில் அம்பலப்படுத்திய நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் சட்டமாணி பட்டம் போலியானது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் சட்டமாணி பட்டம் குறித்து பாராளுமன்றத்தில் சந்தேகங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், நாமல் ராஜபக்ஷ லண்டனில் City University of London பெற்ற சட்டமாணி சான்றிதழில் உள்ள கையொப்பத்தில் சிக்கல் உள்ளது என்றும், சட்டக் கல்லூரி அதை ஏற்கவில்லை என்றும் அமைச்சர் சில ஆவணங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தன்னிடம் இருப்பதாகக் கூறப்படும் பட்டம் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டப்பரீட்சையில் மோசடி செய்தே முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சட்டத்தரணியானார் என தெரிவித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் பல விடயங்களை அம்பலப்படுத்தியுள்ளார். (நி)


**யாழ். மாவட்ட பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)**
**இல 52 சோமசுந்தரம் லேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணம்**

ஏல விற்பனை
அச்சகப் பாவனையிலிருந்து விலக்கப்பட்ட கமடா ஓப்செற் (700CDX-18376) இயந்திரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.
திகதி - 08.12.2025 திங்கட்கிழமை
இடம் - இல 499. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(சமாசத்தின் பழைய அச்சக கட்டிடம்)
நேரம் - மு.ப 11.00 மணி
ஏலத்தில் கோரிப் பெற்றுக்கொள்பவர்கள் உடனடியாக முழுப்பணத்தையும் செலுத்தி அன்றைய தினமே இயந்திரத்தை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும்

(C-4368)
தொ.பே :- 021 222 5072
20.11.2025
**திரு.சி.சுதர்சன் தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யாத முதியோர் இல்லங்கள் முன்னறிவித்தலின்றி இடைநிறுத்தப்படும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் பிரதீபன்

(யாழ்ப்பாணம்) ..........................

**இதுவரை பதிவு செய்யப்படாத முதியோர் இல்லங்கள் 3 மாதத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**



முதியோர் பராமரிப்பு சேவை தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 13 முதியோர் இல்லங்கள் இயங்கிவருகின்றன.

இதில் மூன்று முதியோர் பாரமரிப்பு நிலையங்கள் இதுவரையில் எந்தவித பதிவினையும் மேற்கொள்ளாமல் இயங்கிவருகின்றன.

இந்த முதியோர் இல்லங்கள் உடனடியாக மூன்று மாத கால அவகாசத்திற்குள் பதிவினை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் எந்த விதமான முன்னறிவித்தலும் இல்லாமல் இடைநிறுத்தப்படும் என்றும், முதியோர் பராமரிப்பு நிலையங்களைப் பொறுத்தமட்டில் இன்று தேவைக்குரிய விடயமாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், முதியோர் இல்லங்கள் முதியோர்களை சரியான வகையில் பராமரிக்க வேண்டிய கடப்பாடு உள்ளதாகவும், குறிப்பாக முதியோர் இல்லங்கள் உடல் பராமரிப்பில் மட்டும் அக்கறை காட்டாமல் அவர்களின் உள ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் இரு மாதங்களுக்கு ஒரு முறையாவது இவ்வாறான உள ஆற்றுப்படுத்துகை சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதுடன், இதற்கு மேலாக முதியோர் இல்லங்கள் தொடர்பில் சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அதாவது முதியோர் இல்லங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், முகாமையாளர் முன்னிலையில் பாராமரிக்கும் விதத்திற்கும் முகாமையாளர் இல்லாத வேளையில் நடந்து கொள்ளும் விதத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதாகவும், சில ஊழியர்கள் முதியோர்களுடன் மரியாதையற்ற சொற்பிரயோகத்தை மேற்கொள்வதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (8-33)

# சீரற்ற காலநிலையால் யாழில் 64 பேர் பாதிப்பு

(அராலி)

காற்றுடன் கூடிய கனமழை காரணமாக யாழில் 18 குடும்பங்களை சேர்ந்த 64பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச்சேர்ந்த 13பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளதுடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த எண்மர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த எண்மரும், ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எண்மரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (8-104)

### புங்குடுதீவில்

# இரண்டு நன்னீர்க் கிணறுகள் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

புங்குடுதீவு ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள இரண்டு நன்னீர் கிணறுகள் தமிழ்த் தேசிய பேரவையின் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் நிதியுதவியில் சுத்தம் செய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர். வே.சு.கருணாகரன் நினைவாக மேற்படி செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் புங்குடுதீவுப் பிரதேசத்தில் அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்ற மேற்படி கிணறுகளை சவர்க்கார உறைகள் போன்ற குப்பைகளை அவ்விடத்தில் போடாது உங்கள் வீட்டு கிணறு போன்ற அக்கறையுடன் பயன்படுத்துமாறு வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (8-30)

# செவிப்புலனற்றோருக்கான சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலனற்றோருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 17 ஆம் திகதி மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதற்கட்டமாக 11 செவிப்புலனற்றோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மேலதிக அரசாங்க அதிபர்- காணி, பிரதம பொறியியலாளர், உதவி மாவட்ட செயலாளர், கணக்காளர், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர், மோட்டார் வாகனப் பரிசோதகர், யாழ்.மாவட்ட தமிழ் செவிப்புலனற்றோர் அமைப்பு தலைவர் மற்றும் இலங்கை செவிப்புல மத்திய சம்மேளனப் பிரதிநிதி, பயனாளிகள், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களிற்கான சாரதி அனுமதிப் பத்திரமானது இரண்டு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டு, செவிப்புலனற்றோர் என அடையாளம் காணக்கூடிய ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட தலைக் கவசம். ஜக்கட் என்பன அணிந்து மோட்டார் சைக்கிளை செலுத்துதல் வேண்டும்.



மோட்டார் சைக்கிளின் முன்பக்கத்தில் மேற்படி ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

வாகனத்தினை செலுத்தும்போது அவர்கள் தமது சங்கத்தில் உள்ள பொறுப்பாளருடன் தொடர்பினை பேணக்கூடியவாறு வட்ஸ்அப் செயலியுள்ள தொலைபேசியை எடுத்துச்செல்ல வேண்டும்.

போன்ற நிபந்தனை களுடன் மேற்படி சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# அவயவங்களை இழந்தோருக்கு மறுவாழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் வடக்கு கிழக்கில் வாழும் அவயவங்களை இழந்த மற்றுமொரு தொகுதியினர் சென்னை சென்றுள்ளனர்.

கனேடிய அரசு, கனடா வாழ் இலங்கை புலம்பெயர் மக்கள் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் யாழ்.பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் இந்த திட்டமானது, வடக்கு கிழக்கில் அவயவங்களை இழந்து வாழும் மக்களின் மறுவாழ்வை மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் மாற்று அவயவங்கள் பொருத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகளுக்காக 35 பேர் கொண்ட மாற்றுத் திறனாளிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

யுத்தம் மற்றும் இதர பாதிப்புகளால் பாதிப்புற்று பல்வேறு இடர்பாடுகளுடன் வாழும் மாற்றுத் திறனாளிகளின் வழமையான செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய, இலகுவாகக் கையாளக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட செயற்கை அவயவங்கள் குறித்த 35 பேருக்கும் சென்னை ஸ்பாக் மிண்டா நிறுவனத்தினூடாக வழங்கப்படவுள்ளதாக குறித்த ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (8-33)

# பனல்போட் விசமிகளால் சேதம்

(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு முன்பாக உள்ள பனல்போட் சில விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரு பனல்போட்டும் சேதப்படுத்தப்பட்ட போதிலும் நீர் வழங்கல் இயந்திரத்தில் சேதம் ஏற்படாமையால் நீர் வழங்குவதில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு முன்பாக உள்ள பனல்போட்டில் இருந்து



பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கலை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை வழங்கி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (8-60)

# சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்தாமல் எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உபதலைவர்

(கரணவாய்)

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி கடற்றொழிலை அபிவிருத்தி செய்யப் போவதாக அறிவித்திருந்தார்.

ஆனால் சட்டவிரோத கடற்றொழில் மற்றும் இந்திய இழுவைமடிப் படகுத் தொழில்களை கட்டுப்படுத்தாமல் எப்படி கடல்வளத்தை அபிவிருத்தி செய்யமுடியும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார். அவர் இன்று இடம்பெற்ற நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதும் அதிகளவான இந்திய இழுவைப்படகுகள் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வந்து செல்கின்றன.

உள்ளூர் இழுவை மடி படகுகளும் சட்டவிரோத இழுவைமடிப் படகுகளும் சட்டவிரோத தொழில்கள் மேற்கொண்டுவருவதனால் மீன் உற்பத்தி பெருகுமிடங்கள் அழிந்து வருகின்றன.

அத்துடன் மீன் பெருக்கமும் இல்லாது போகின்றன.

இவ்வாறு இருக்கையில் மீன் இல்லாத கடலை எப்படி அபிவிருத்தி செய்யமுடியும் அத்துடன் சொப்பிங் பைகள் தற்போது காசுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால் வர்த்தகர்கள் தான் நன்மை அடைகின்றார்கள். சொப்பிங் பைகள் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தி செய்வோரை கட்டுப்படுத்தாது அப்பாவி மக்களை துன்புறுத்துவதாகவும் தெரிவித்ததுடன் அதிகளவான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் கடற்கரை ஓரங்களில் கரை ஒதுங்குவதாகவும் தெரிவித்தார்.

எனவே ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் கடற்றொழிலை அபிவிருத்தி செய்ய பாடுபடவேண்டும் என தெரிவித்தார். (8-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் நினைவாலயம் நாளை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தாய் மண்ணின் விடியலுக்காக வித்தாகிப்போனவர்களின் நல்லூர் நினைவாலயம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

தாய் மண்ணுக்காக தம் உயிர்களை அர்பணித்தவர்களுடன் மாமனிதர்களையும் நாட்டுபற்றாளர்களையும் மற்றும் பல ஆவணப்படுத்தல்களையும் கொண்டு இம்முறை நல்லூர் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

தலைமுறைகள் கடந்து வாழும் எம் மாவீரச் செல்வங்களின் நினைவாலயத்திற்கு உங்கள் இளைய தலைமுறையினரையும் அழைத்து வந்து உங்கள் மனப்பதிவுகளைப் பதிந்து விட்டுச் செல்லுங்கள் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (8-33)


## பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ/து)

**விண்ணப்பம் கோரல்**

1. பதவி - கணக்காளர்
குறி/ இல :- 104/09
சம்பள அளவுத்திட்டம் - 35200-640x10-700x10-860x10-57200
(கூ.ஊ.ஆணைக்குழுவின் சு.நிரூப இல 02/2025(1)இற்கு அமைவானது)

**தகைமைகள்:-**

அ. கூட்டுறவு ஊழியர் 10 வது சம்பளத்திட்டப்பதவியில் கணக்காளர்/ உள்ளகக்கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டப்பதவியில் உள்ளகக்கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

**அல்லது**

இ.கூட்டுறவு ஊழியர் உயர்தராதரபத்திரப்பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக் / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுத்துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டுகால அனுபவம்

**2. பதவி:-எழுதுனர்**
குறி/ இல:- 302/13
சம்பள அளவுத்திட்டம் - 33360-520x10-580x10-740x10-51760
(கூ.ஊ.ஆணைக்குழுவின் சு.நிருப இல 02/2025(1)ற்கு அமைவானது)

**தகைமைகள்:-**

அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ.கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப்பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதரண தராதரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி

**நிபந்தனைகள்:**

01. 18-45 வயதிற்கிடைப்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரப் பதவி வகிப்போருக்கு இவ்வயதெல்லை பொருத்தமற்றது என்பதுடன் அவ் விண்ணப்பதாரிகள் தத்தமது கூட்டுறவுச் சங்கங்களினுடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
02. சங்கத்தின் தொழிற்பரப்பில் வதிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
03. விண்ணப்ப முடிவுத்திகதி 07.12.2025
04. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**தலைவர்,**
**பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்,**
**1ஆம் குறுக்குத்தெரு,**
**பருத்தித்துறை.**

**திகதி:-20.11.2025**

(C-4366)


# துறையூர் மீன்சந்தை விவகாரம் விரைவில் சட்ட நடவடிக்கை

## தவிசாளர் அசோக்குமார்

(அராலி)

வேலணை பிரதேச சபையினால் விட்டுக்கொடுப்பு, நெகிழ்வுப் போக்குடன் பல தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டும் துறையூர் மீன்சந்தை வரி அறவீடு, விவகாரத்துக்கு அப்பகுதி துறைசார் தரப்பினரோ கடற்றொழில் சங்கங்களோ ஒத்துழைப்போ சாதகமான போக்கையோ வழங்காமையால் குறித்த சந்தை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைக்கு செல்லவுள்ளதாக தவிசாளர் சி.அசோக்குமார் அறிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த சந்தை 2026 ஆம் ஆண்டுக்கான பகிரங்கக் கேள்வி கோரலில் உள்வாங்கப்பட்டமை தொடர்பில் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதனால் கேள்வி எழுப்பப்பது.

இதற்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்த தவிசாளர் மேலும் கூறுகையில்,

துறையூர் மீன் சந்தை, குத்தகை மற்றும் வரி அறவீடு குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையால் நீண்டகாலமாக சர்ச்சையுடன் கூடிய பேசுபொருளாக இருந்து வருகின்றது.

குறிப்பாக குறித்த விடயம் தொடர்பில் பிரதேச சபை வரி அறவீடு செய்ய வலியுறுத்தியதுடன் அது தொடர்பிலான சபையின் சுற்று நிரூபங்களையும் குறித்த தரப்பினருக்கு காண்பித்திருந்தது.

ஆனால் குறித்த சந்தை இறங்கு துறை என்றும் தாம் வரி அறவீட்டை எதிர்ப்பதாகவும் தமது அறுவடை மீன்களை மொத்தமாக விற்க இலவசமாக அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் வேலணையின் தீரா பிரச்சினையாக உருவெடுத்துள்ள குறித்த துறையூர் சந்தையின் தீர்வுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆலோசனை கடிதம் அனுப்பியிருந்தோம்.

அவர்கள் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபையையே நடவடிக்கை எடுக்குமாறு எமக்கு பதில் கடிதம் அனுபியுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் அவர்களுக்கு இன்று வரை ஒரு சந்தர்ப்பம் வழங்கியிருந்தேன்.

அதையும் அவர்கள் உதாசீனம் செய்துள்ளனர் என்றதன் அடிப்படையில் குறித்த சந்தை தொடர்பில் எத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமோ அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச சபையின் இழக்கப்படும் வருமானம் மீள் ஈட்டப்படும் என்றும் தெரிவித்தார். (8-104)


## பகிரங்க அறிவித்தல்

### ஆதன உரிமையினை வெளிப்படுத்தல்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவும் சாவகச்சேரி பிரதேச சபையும் நாவற்குழி கோவிற்பற்று நாவற்குழி இறை J/294 நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள **சின்னட்டி தோட்டம்** நில அளவையாளர் திரு.ந.கேதீஸ்வரன் அவர்களால் 07.11.2023ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 5827ஆம் இலக்கப்படத்தின் துண்டு 01 என காட்டப்பட்டுள்ளது. நிலப்பரப்பு இரண்டு குளி பதினொன்றிற்கும் எல்லைகள்

கிழக்கு - முத்துக்குமாரு சஞ்சீவனிற்குரிய ஆதனம்
வடக்கு - கேரதீவு வீதி
மேற்கு - பூபாலசிங்கம் ராஜ்குமாருக்குரிய ஆதனம்
தெற்கு - றோய்சன் புவனராஜ்ற்குரிய ஆதனம்

இதடங்கலும்.இவ்வெல்லைக்குட்பட்ட நிரந்தரக் கடையும் அரை நிரந்தர வீடும் கிணறும் மலசலகூடமும்

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மேனகா ஜீவதர்ஷன் முகதாவில் 2024.04.30ஆம் திகதி 2561ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் சதாசிவம் பூபாலசிங்கம் என்பவருக்கு சொந்தமும் ஆட்சியுமானது என வெளிப்படுத்தப்ப டுகிறது.

13.08.2024ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் காயத்திரி குமாரதேவன் அவர்கள் முகதாவில் இலக்கம் 2502 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் **சின்னட்டி தோட்டம்** நிலப்பரப்பு 02 குளி 11 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான மதியழகன் விதுர்ஷனிற்கு வந்தடைந்துள்ளது.


தற்போது ஆதனத்தில் மதியழகன் விதுர்ஷன் கட்டட அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனம் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் **மதியழகன் விதுர்ஷன் என்பவருக்கு கட்டட அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்** என்பதனை அறியத்தருகின்றேன். மேலும் இவ் கட்டட அனுமதி வழங்குவதால் ஏற்படக்கூடிய ஆதனஉரிமை தொடர்பான எவ்விளைவுகளுக்கும் சாவகச்சேரி பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொன்னையா குகதாசன்,**
**தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை.** (C-4367) **20.11.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## போதையில் மரணத்தை ஏற்படுத்தினால் இனி தப்ப முடியாது



(ஒட்டாவா)
மதுபோதையில் வாகன விபத்தை ஏற்படுத்தி, ஒரு குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தினால், குற்றம் சாட்டப்பட்ட சாரதி அக்குழந்தைக்குத் தொடர்ச்சியாக ஜீவனாம்சம் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் புதிய சட்ட நடவடிக்கையை உருவாக்கிவருவதாக ஒன்ராறியோ மாநில அரச அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிவிப்பில், 2023ஆம் ஆண்டு டெக்சாஸ் மாநிலத்தில் அறிமுகமான இதே போன்ற சட்டத்தை ஒன்ராறியோவும் ஆய்வு செய்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

அங்கு, "போதையில் மரணம் ஏற்படுத்தியதாக" குற்றம் சாட்டப்படும் சாரதிகள், பாதிக்கப்பட்ட குழந்தைக்கு 18 வயது ஆகும் வரை அல்லது உயர்நிலை கல்வியை முடிக்கும் வரை ஜீவனாம்சம் செலுத்த வேண்டும்.

ஒன்ராறியோ அதிகாரிகள், இதே மாதிரியான விதிமுறைகள் மற்றும் பிற நாடுகளிலுள்ள உதாரணங்களை ஆய்வு செய்து, மாநிலத்தில் அதை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது குறித்து ஆராய்வதாகத் தெரிவித்துள்ளனர். (நி)


## செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை கண்மூடித்தனமாக நம்பக்கூடாது

### சுந்தர் பிச்சை வலியுறுத்து

(வோஷிங்டன்)
செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகள் அளிக்கும் எல்லாவற்றையும் மக்கள் கண்மூடித்தனமாக நம்பக் கூடாது என கூகுளின் தாய் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.

ஒரு ஊடக நேர்காணலின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு





AI பொருத்தமாக இருந்தாலும், செய்திகள் போன்ற முக்கியமான மற்றும் உணர்வுள்ள துறைகளில் AI மாதிரிகள் தவறுகளுக்கு ஆளாகக்கூடும்.

இதனைப் பயன்படுத்தும் போது, மக்கள் அவற்றை ஏனைய கருவிகளுடன் இணைத்து பயன்படுத்த வேண்டும் என்றும், தகவல் சரிபார்ப்புக்காகக் கூகுள் தேடல் போன்ற அதிக அடிப்படை கொண்ட உலாவிகளைப் பயன்படுத்துமாறு அவர் மக்களை வலியுறுத்தினார்.

துல்லியமான தகவலை வழங்குவதன் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுவதாகவும், கூகுள் தனது அமைப்புகளில் முடிந்த வரை துல்லியமான தகவலை வழங்க முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## இந்திய - ரஷ்யா உறவுகள் உலக நலனுக்கு முக்கியமானது!

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



(டில்லி)
இந்தியா - ரஷ்யா உறவுகள் இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்கு மட்டுமல்ல, உலக நலனுக்கும் முக்கியமானது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


தற்போது எஸ்.ஜெய்சங்கர் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பான எஸ்சிஓவில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் பிரதமர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தில் இந்திய பிரதிநிதிகளுக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தலைமை வகிக்கிறார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

அதன்பின் ஜெய்சங்கர் பேசுகையில், இந்தியா - ரஷ்யா உறவுகள் இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்கு மட்டுமல்ல, உலக நலனுக்கும் முக்கியமானது. உக்ரைன், மத்திய கிழக்கு மற்றும் ஆப்கானிஸ்தான் மோதல் உள்ளிட்டவை குறித்த கருத்துக்களை கூட்டத்தில் பரிமாறிக்கொள்வோம். அமைதியை நிலைநாட்டுவதற்கான ரஷ்யாவின் சமீபத்திய முயற்சிகளை இந்தியா ஆதரிக்கிறது என்று தெரிவித்தார். (நி)

## லெபனான்
## அகற்



லெபனானில் இஸ்ரேல் எழுப்பிய சுவரானது அந்நாட்டின் எல்லையை தாண்டி வருவதாக லெபனான் ஜனாதிபதி ஜோசப் அவுன் குற்றம்சாட்டியுள்ளார்.

அதைத் தொடர்ந்து, ஐக்

கிய ந
வரை
யாகக்
நீலக்
சுவர்
பதை
பாதுக
அகற்

## காற்பந்து ரசி
## சிறப்பு வி

### அமெரிக்க ஜனாதிப




(வோஷிங்டன்)
அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டியைக் காண வரும் ரசிகர்களுக்காக, சிறப்பு விரைவு விசா வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடாவில் அடுத்த ஆண்டு ஜூன் முதல் ஜூலை வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ன் எல்லையில் இஸ்ரேலின் பாதுகாப்புச் சுவர்
# ...ற்றுமாறு ஐ.நா வலியுறுத்து



**(ஜெனீவா)** ••••••••••••••••••

**லெபனானின் யாரோன் பகுதியில் இஸ்ரேல் எழுப்பிய சுவரை அகற்றுமாறு இஸ்ரேல் இராணுவத்துக்கு ஐக்கிய நாடுகளின் எல்லை காக்கும் படை வலியுறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

...ிய நாடுகள் சபையால் ...வரைபடத்தில் எல்லை ...ாகக் குறிப்பிடப்பட்டுள்ள ...லக் கோட்டை இந்த ...வர் தாண்டி நீண்டிருப் ...தை சுட்டிக்காட்டி, ...ாதுகாப்புச் சுவரை அகற்றுமாறு இஸ்ரேலுக்கு ஐ.நா. அறிவுறுத்தியுள்ளது.

இஸ்ரேல் - காசா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் களமிறங்கினர். இதனால் லெபனான் மீதும் இஸ்ரேல் போர் நடத்தியது.


பின், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தலையீட்டால் கடந்த ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதற்கிடையே 2022இல் காசாவுடன் போர் தொடங்கியதில் இருந்தே தனது வடக்கு எல்லையை இஸ்ரேல் பலப்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே லெபனான் எல்லையில் இஸ்ரேல் சுவர் எழுப்பியிருந்தது.

அந்த சுவர், லெபனான் எல்லையை தாண்டுவது போல் அமைக்கப்பட்டிருப்பதாக காரணம் காட்டப்பட்டுள்ள நிலையில், அந்த சுவரை அகற்றுமாறு ஐ.நா இஸ்ரேலுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

# ...ரசிகர்களுக்கு
# ...ரைவு விசா
## ...திபதி சிறப்புத் திட்டம்



...பற ...ந்து ...ும் ...வு ...ாக ...ல்ட் ...ா, ...்டு ...ரை

உலகக் கிண்ண கால்பந்து போட்டி நடைபெறவுள்ளது.

அமெரிக்காவில் நடக்கும் போட்டியைக் காண தற்போதே இலட்சக்கணக்கானோர் அனுமதி நுழைவுச் சீட்டுக்களை முன்பதிவு செய்துள்ளனர்.

எனினும், ட்ரம்பின் விசா கட்டுப் பாடுகள் கால்பந்து போட்டியைக் காண வரும் ரசிகர்களைப் பாதிக்குமா என்ற சந்தேகம் இருந்து வந்தது.

இந் நிலையில், வெள்ளை மாளிகையில் "ஃபிஃபா" எனப்படும் சர்வதேச கால்பந்து சங்கத்தின் தலைவர் ஜியான்னி இன்பான் டினோ உடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஃபிஃபா பாஸ்" என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ், "ஃபிஃபா" மூலம் நேரடியாக அனுமதி நுழைவுச் சீட்டுக்களை வாங்கிய ரசிகர்களுக்கு விசா நேர்காணலில் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் அவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர் எனவும் வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

---

# துருக்கியில் அமெரிக்க தூதரை சந்திக்கிறார் ஜெலன்ஸ்கி

(அங்காரா)

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்து மூன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இருந்தபோதிலும் இரு நாடுகளுக்கு இடையிலான போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

ரஷ்யா உக்ரைனில் உள்ள எனர்ஜி கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்யா தாக்குதலை முறியடித்து உக்ரைனும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளையில் போர் நிறுத்தத்திற்கான முயற்சிகளையும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மேற்கொண்டு வருகிறார்.

ரஷ்யாவை எதிர்ப்



பதற்கு இராணுவ பலத்தை அதிகரிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெலன்ஸ்கி சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார்.

துருக்கி செல்லும் உக்ரைன் ஜனாதிபதி அமெரிக்காவின் சிறப்பு தூதராக ஸ்டீவ் விட்காஃபை சந்திக்க இருக்கிறார். அப்போது, ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான புதிய முயற்சி குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படக்கூடும் எனத் தெரிகிறது.

இந்த வருட தொடக்கத்தில் உக்ரைன் - ரஷ்யா இடையிலான அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கு துருக்கி ஏற்பாடு செய்தது. இந்த பேச்சுவார்த்தையும் போர் நிறுத்தம் குறித்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதே வேளையில் இரு நாடுகளுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் செய்துகொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யா-உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சி மேற் கொண்டு வருகிறார்.

அமெரிக்காவின் பரிந்துரைகளை ரஷ்யா நிராகரித்ததால் போர் முடிவுக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவைச் சந்தித்த இந்தியத் துணைத் தூதர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஶ்ரீ ஹர்விந்தர் சிங், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தங் காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை நடை பெற்றது.

இதன்போது இந்தியத் துணைத் தூதுவர் ஶ்ரீ ஹர்விந்தர் சிங் மற்றும் மகிந்த ராஜபக்ஷ இடையில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மகிந்த ராஜபக்ஷவின் 80 ஆவது பிறந்தநாளுக்கு, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சார்பில் இந்தியத் துணைத் தூதுவர் ஶ்ரீ ஹர்விந்தர் சிங், வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1987 - இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Business Change Manager (London)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16209

பிறப்பு: 1997 - இந்து
நட்சத்திரம்: சுவாதி
2இல்செவ்
கி-பா-32 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, Engineer
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16210

பிறப்பு: 1991 - இந்து
நட்சத்திரம் : பூராடம்
கி.பா- 28
7இல்செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16211

பிறப்பு :1992 - இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
7இல்செவ்
கி.பா: 23
உயரம்: 6'
தகைமை/தொழில்:BSc,Software Engineer
எதிர்பார்ப்பு - உத்தியோகம்
தொ.இ: B/16214

பிறப்பு:1985 -இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 19 3/4
3இல்சூரிசெவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Diploma, Civil Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16216

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 14
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L,தையல்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16215

பிறப்பு -1982 - இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 5'7"
தகைமை/தொழில் - work(Germany)
எதிர்பார்ப்பு - : விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16217

பிறப்பு - 1995 - இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா- 65
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, Work (Canada)
எதிர்பார்ப்பு - Only Canada
தொ.இ: G/16223

பிறப்பு -1999 - இந்து
நட்சத்திரம்: பரணி
12இல்செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்- A/L
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16222

பிறப்பு-1998 - இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
7இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு - Doctor
தொ.இ: G/16224

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 487

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அவமதிப்பு!

"நேற்று என்னை ஒருவன் அவமானமாக பேசிவிட்டான் சார். என்னாலே அதைத் தாங்கிகொள்ளமுடியவில்லை. இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. மனதுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு!" என்று சொல்லி வருத்தப்பட்டார் ஒருவர்.

இது அவருக்கு மட்டும் ஏற்படுகின்ற அனுபவம் இல்லை! எல்லாருக்குமே எப்பவாவது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவமதிப்பு ஏற்படத்தான் செய்கிறது.

அவமதிப்பு ஏற்பட்டுவிட்டால் உடனே நாம்தான் மனதுக்குள்ளே. அதை நினைத்து நினைத்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். மகான்கள் எல்லாம் அப்படி அவஸ்தைப்படுவதில்லை! அவமதிப்புக்களை அவர்கள் எடுத்துக் கொள்கிற விதமே தனி!

புத்தர் ஒருநாள் கிராமத்து வழியாக போய்க்கொண்டிருக்கிறாராம். அந்த ஊர் மக்கள் அவரைப் பற்றி ரொம்ப கன்னா பின்னா என்று பேசியிருக்கிறார்கள். திட்டியிருக்கிறார்கள். அவமதித்து இருக்கிறார்கள்!

அவர்கள் அவமதித்து, சொன்னதையெல்லாம் ரொம்பப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார் இவர். அதன்பின் அவர்களைப் பார்த்து இன்னமும் ஏதாவது சொல்வதற்கு ஆசைப்படுகிறீர்களா? ஏனென்றால் நான் அடுத்த கிராமத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட நேரத்திலே அங்கே போய்ச் சேர வேண்டும். அங்கே எனக்காகப் பலபேர் காத்துக் கொண்டிருப் பார்கள். நீங்கள் இன்னமும் ஏதாவது என்னைப் பார்த்து சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டால் நான் இந்த வழியாக மறுபடியும் வரும்போது அதற்காக நேரம் ஒதுக்குகிறேன். அந்த சமயத்திலே நீங்கள் வந்து சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லுங்கள்!" என்றார்.

இவர் இப்படிச் சொல்வதைக் கேட்டதும் அந்த ஊர் மக்களுக்களுக்கு ரொம்ப ஆச்சரியம்! என்ன இது நாம் இவரைத் திட்டிக்கொண்டிருக்கிறோம். இவர் இப்படிப் பதில் சொல்கிறாரே என்று யோசித்தார்கள். அதை அவரிடமே கேட்டுவிட்டார்கள். "என்ன இது. நாங்கள் ஏதோ ஒன்றை உங்களிடம் சொல்லிக்கொண்டு இல்லை உங்களை அவமானப்படுத்திக் கொண்டு அல்லவா இருக்கிறோம்!" என்றார்கள். புத்தர் சிரித்தார்.

"அது உங்களுக்கு உள்ள சுதந்திரம். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் எனக்குள்ள சுதந்திரம். இப்போது அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை!" என்றார்.

கிராமத்து மக்கள் ஆச்சரியமாக அவரைப் பார்த்தார்கள். புத்தர் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார்.

"இதோ பாருங்கள். உங்கள் கிராமத்துக்கு வருவதற்கு முன்னாடி நான் இன்னொரு கிராமம் வழியாக நடந்து வந்துகொண்டிருந்தேன். அந்த ஊர் மக்கள் எனக்கு இனிப்புகள் எல்லாம் கொண்டுவந்து கொடுத்தார்கள்" உங்கள் அன்புக்கு நன்றி. நான் இனிப்புச் சாப்பிடுவதில்லை அதனாலே எனக்கு இனிப்புகள் வேண்டாம்!" என்று அவர்களிடம் சொன்னேன்.

அதற்குப் பிறகு அந்த இனிப்புகளை அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அந்தக் கூட்டத்திலே இருந்த ஒருவர் என்ன செய்திருப்பார்கள். அவர்கள் அதைத் திருப்பி வீட்டுக்கு எடுத்துக்கொண்டுப் போய் இருப்பார்கள்!" என்றார்.

"அப்படியேதான் இப்போதும் நீங்கள் செய்யப் போகிறீர்கள்! எனக்கு நீங்கள் ஏற்படுத்திய அவமானங்களை இப்போது நீங்கள் திரும்ப உங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டியது தான்.

ஏனென்றால் நான் உங்களுடைய அவமதிப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை! அதனாலே வேறு வழியில்லை. நீங்கள் எடுத்துக்கொண்டு போக வேண்டியதுதான்!" என்றார் புத்தர்.

இப்போதுதான் அந்தக் கிராமத்து மக்கள் யோசிக்க ஆரம்பித்தார்களாம். அவமதிப்புகளை பெரியவர்கள் எதிர்கொண்ட முறை இது! நாம் அப்படியா இருக்கிறோம்.

நம் ஆள் ஒருவன். ரொம்ப வேகமாக வந்தான். "சார் எங்கள் எதிர் வீட்டுக்காரன் என்னை நான்கு பேருக்கு முன்னாடி அவமானப்படுத்தி விட்டான் சார்!" என்றான். "என்ன செய்தான்?" என்று கேட்டேன். "பளார் பளார்" என்று என் கன்னத்தில் அறைந்துவிட்டான் சார்!" என்றான். "அவனிடம் ஆறு வருடத்திற்கு முன்னாடி 50 ரூபா கடன் வாங்கியிருந்தேன்!" என்றான்.

"அதை திருப்பிக் கொடுத்திருந்தால் அவன் அறைந்திருக்க மாட்டானே!" என்றேன்.

"திருப்பிக் கொடுத்துவிட்டேன் சார். மறுபடியும் அறைகிறான்!" என்றான் அவன்.

"அது எப்படி?" என்றேன் ஒன்றும் புரியவில்லை!

"நான் திருப்பிக் கொடுத்தது அவனிடம் வாங்கிய பணத்தை இல்லை சார் அவனிடம் வாங்கிய அறையை!" என்கிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்

## கரைச்சி பிரதேச சபையில் கண்டனம் நிறைவேற்றம்

(தருமபுரம்)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபையில் ஏகமனதாக கண்டனம் நிறைவேற்றம்.

குறித்த சம்பவம் தொடர்பான பிரேரணையை உறுப்பினர் முத்து சிவமோகன் கொண்டு வந்த நிலையில் குறித்த பிரேரணைக்கு ஆதரவாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, சுயேட்சைக்குழு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ்க் கூட்டணி போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவாக தமது கருத்துக்களை முன்வைத்த மையைத் தொடர்ந்து குறித்த சம்பவத்திற்கான கண்டனம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (8-316)

## மன்னார் கடற்கரையில் பிளாஸ்ரிக் துகள்கள்



(மன்னார்)

தென் பகுதியில் கரை ஒதுங்கிய பிளாஸ்ரிக் துகள்கள் தற்போது மன்னார் கடற்கரையோரங்களிலும் கரையொ துங்கி வருகின்றது.

வடக்கு கரையோரம் சார்ந்த பகுதிகளில் பேசாலை, காட்டாஸ்பத்திரி, சிறுத்தோப்பு ஆகிய கடற்கரை யோரங்களில் குறித்த பிளாஸ்ரிக் துகள்கள் கரையொதுங்கி வருகின் றன.

இதேவேளை அண்மையில் இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே விபத்திற்குள்ளான கப்பலில் காணப்பட்ட பிளாஸ்ரிக் துகள்கள் மன்னார் கடற்கரையோர பகுதிகளில் கரை ஒதுங்கிய நிலையில் ஏற்கனவே குறித்த பிளாஸ்ரிக் துகள்கள்களை அகழ்வு செய் யும் நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டன.

இந்த நிலையில் தென் பகுதியில் கரை ஒதுங்கிய பிளாஸ்ரிக் துகள்கள் தற்போது மீண்டும் மன்னார் கீடற்கரை பகுதிகளில் கரையொதுங்கி வரு கின்றன. (8- 285)

## நன்னீர் மீன்பிடியை ஊக்குவித்தல்



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பத்து இடங் களில் பொது வளங்களை முகாமைத் துவம் செய்தல் திட்டத்தின் கீழ் நன்னீர் மீன் பிடியை ஊக்குவிப்பதன் மூலம் பெண்கள் தலைமை தலைமைத்துவ குடும்பங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் அரசாங்கத்தின் நிதி உதவி யின் கீழ் GIZ - SCOPE ஊடாக விழுது நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்ற குறித்த செயற்றிட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட குளங்கள் மற்றும் தொட்டிகளான சின்ன விளாங்குழி, பெரிய விளாங்குழி, தாமரைக் குளம், மினுக்கன், நெடுங்கண்டல் (துவரம் மோட்டை), கன்னாட்டி, சாளாம்பன், குமனாயங்குளம், இசங்கங்குளம், காத்தான்குளம் ஆகியவற்றுக்கு 1 இலட்சத்து 14 ஆயிரம் மீன் குஞ்சு கள்விடப்பட்டுள்ளன.

அத்தோடு தொட்டிகளில் உள்ள மீன்களுக்கு தேவையான உணவுகள் மற்றும் குளங்களில் மீன் அறுவடை செய்வதற்கான வலைகளும் கைய ளிக்கப்பட்டன. (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 100 | 150 | 160 | 70 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 | -- | 230 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 250 | 250 | 180 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 200 | 120 | 200 | 80 |
| கோவா | 180 | 180 | 200 | 250 | 200 | 130 |
| கரட் | 250 | 250 | 300 | 250 | 200 | 160 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 | 80 | 40 |
| புடோல் | 120 | 300 | 120 | 300 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 70 | 50 | 160 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 200 | 350 | 220 | 230 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 150 | 200 | 180 | 160 |
| பாகற்காய் | 600 | 700 | 400 | 1200 | 600 | 450 |
| வெண்டக்காய் | 150 | 250 | 120 | 300 | 150 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 200 | 200 | 250 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 300 | 250 | 350 | 280 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 250 | 160 | 140 |
| பீற்றூட் | 300 | 220 | 120 | 250 | 150 | 90 |
| கறிமிளகாய் | 600 | 750 | 600 | 600 | 650 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 400 | 1000 | 600 | 200 |
| போஞ்சி | 450 | 500 | 400 | 500 | 350 | 330 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 120 | 120 | -- | -- |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 80 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 1700 | 1500 | 600 | 600 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- | 145 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 800 | -- | 750 |
| வெங்காயப்பூ | 600 | 500 | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 150 | 250 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 80 | -- | 35 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 120 | 200 | -- | -- |

## இராசிபலன்

20.11.2025
கார்த்திகை 04, வியாழக்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.12 மணிவரை

விசாகம் முற்பகல் 11.35 மணிவரை
சுப நேரம் 7.39-9.09 மணிவரை
இராகுகாலம் 01.39-3.09 மணிவரை

சந்திராஷ்டமம்:
ரேவதி, அச்சுவினி.

வளவன்




தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுற்றத்தின் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.




கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும்.




தொலைபேசி வழியில் கிடைக்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுய முயற்சிகளின் மூலம் சுகம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம்.




வழிபாடு குதூகலம் தரும், விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் மகிழ்ச்சியைத் தரும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.




எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.




உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுபாக அமையும், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

தவறான பதிலைக் காட்டிலும் மௌனம் சிறந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 914





"முதன்மந்திரி எதற்காக என்னை எல்லோரும் இப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்? எனக்குப் புதிதாகப் பைத்தியம் பிடிக்கவில்லை. பழைய பைத்தியந்தான் மிச்சமிருக்கிறது. இப்போது நான் சிரிப்பதன் காரணம் உங்களுக்கெல்லாம் தெரியவில்லையா? சோழ வள நாட்டில் இவள் மலையில் மோதிக் கொண்டு காயம் பட்டதாகக் கூறுகிறாளே? அதை எண்ணித்தான் சிரித்தேன். மலையைப் பற்றிச் சொல்வானேன்? இங்கே ஒரு சிறிய விக்கிரகம் செய்யக் கூடக் கல் கிடைக்காதே? சோழச் சக்கரவர்த்தியின் தலையில் யாராவது கல்லைப் போட விரும்பினால் அதற்குக்கூட ஒரு கருங்கல் கிட்டாதே! இவள் மலை மீது மோதிக் கொண்டதாகச் சொல்கிறாளாமே? எந்த மலையின் மேல் மோதிக் கொண்டாள்? பூங்குழலி, நன்றாக கேள்!" என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வானதியின் முகத்தில் அப்போது ஒரு பிரகாசம் உண்டாயிற்று. அவள் சட்டென்று இரண்டு அடி முன் வந்து சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தினாள்.

"ஐயா! எனக்கு ஒன்று தோன்றுகிறது கட்டளையிட்டால் சொல்லுகிறேன்!" என்றாள்.

"வேளிர் மகளே! நீ வேறு இங்கே இருக்கிறாயா? உன்னை இத்தனை நேரமும் நான் கவனிக்கவே இல்லையே? இவ்வளவு தடபுடலுக்கும் நீ மூர்ச்சையடைந்து விழாமல் இருக்கிறாயே? அதுவே ஆச்சரியந்தான்! உனக்கு என்ன தோன்றுகிறது? எதைப்பற்றி? சொல்!" என்று சக்கரவர்த்தி ஆக்ஞாபித்தார்.

"இந்தத் தேவி மலை மேல் மோதிக் கொண்டதால் காயம் பட்டது என்கிறாரே! அதைப்பற்றி எனக்கு ஒன்று தோன்றுகிறது ஐயா!"

"என்ன? என்ன? நீ புத்திசாலிப்பெண்! உனக்கு ஏதேனும் காரணம் புரிந்தாலும் புரிந்திருக்கும்! சீக்கிரம் சொல்! ஈழ நாட்டில் மலையில் முட்டிக் கொண்டு அந்த இரத்தக் காயத்துடனே இங்கே வந்திருக்கிறாளா?"

"இல்லை, ஐயா இந்த அரண்மனைத் தோட்டத்தில் சிற்ப மண்டபம் ஒன்று இருக்கிறதல்லவா? அதற்குள்ளே இராவணன் தூக்கிப் பிடிக்கும் கைலாச மலை ஒன்று இருக்கிறது. ஒருவேளை அதில் இவர் முட்டிக் கொண்டிருக்கலாம்!"

இவ்விதம் வானதி சொன்னதும் அத்தனை பேரும் வியப்புக் கடலில் மூழ்கிப் போனார்கள். "இருக்கலாம் இருக்கலாம்!" "அப்படித்தான் இருக்கும்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

குந்தவை வானதியின் நெற்றியைத் தொட்டு திருஷ்டி கழிப்பது போல் கையை நெறித்து, "அடி என் கண்ணே! என்ன புத்திசாலியடி நீ! எங்களுக்கெல்லாம் தோன்றாதது உனக்குத் தோன்றியதே!" என்றாள்.

பூங்குழலி அதைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தன்னுடைய ஊமை அத்தையிடம் சமிக்ஞா பாஷையில் பேசினாள் பின்னர், "ஆமாம்! சிற்ப மண்டபத்தில் உள்ள மலைதானாம்!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கடல் எவ்வளவு பெரியது?



கடலில் வசித்து வந்த தவளை ஒரு நாள் கரைக்கு வந்தது. அருகில் இருந்த கிணற்றில் வசித்த தவளையும் வெளியே வந்தது.

இரண்டு தவளைகளும் சந்தித்துக் கொண்டன. ஒன்றை ஒன்று அறிமுகம் செய்து கொண்டது.

அப்போது, "கடல் எவ்வளவு பெரிது?" என்று கேட்டது கிணற்றுத் தவளை. ஏனென்றால் அதற்கு கடலைப் பற்றி தெரியாது.

"கடல் மிகப் பெரிது!" என்றது கடல் தவளை. "எவ்வளவு பெரிது என்று ஒரு அளவு சொல்லு" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"அதாவது கடலுக்கு அளவே கிடையாது. எங்கே தொடங்குகிறது, எங்கே முடிகிறது" என்ற அளவே இல்லை என்றது கடல் தவளை. "எதற்குமே ஒரு அளவு உண்டு என்பார்களே. அப்படி ஒரு அளவைக் கூறு!" என்று வற்புறுத்தியது கிணற்றுத் தவளை.

"என்னால் அப்படிக் கூறவே முடியாது, பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும்," என்று கூறியது கடல் தவளை. கடல் தவளை கூறியதைக் கேட்டுப் பொறுமை இழந்த கிணற்றுத் தவளை, "இந்தக் கிணற்று அளவாவது இருக்குமா நீ வசிக்கும் கடல்?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

கடல் தவளை பலமாகச் சிரித்துக் கொண்டே, என்ன சொல்லியும் உனக்குப் புரியவில்லையே! கடுகு எங்கே? மலை எங்கே? என்பது புரியாத உனக்கு இதனை எப்படி புரிய வைக்கமுடியும்?" என்று சலித்துக் கொண்டது கடல் தவளை.

உடனே கிணற்றுத் தவளைக்குக் கோபம் அதிகரித்து, "நீ ஒரு பொய்யன் கிணற்றை விட கடல் பெரிதாகவே இருக்க முடியாது" என்று கூறிவிட்டுச் சென்றது.

'உலக நடப்புத் தெரியாதவனை கிணற்றுத் தவளை' என்று கூறுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களின் சாரத்தில் கவனம் செலுத்துவது உங்களது மற்றும் பிறரின் நேரத்தையும், சக்தியையும் சேமிக்க உதவும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அநுர அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் சதித்திட்டம்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஊழலுக்கும் போதைப்பொருளுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனால் இந்த நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

தவிர, முக்கிய அரசியல்வாதிகள் ஊழல் காரணமாகக் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டும் வருகின்றனர்.

அதேநேரம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எந்தவித ஆடம்பரமுமின்றி அரச படோபகாரங்களைப் புறந்தள்ளி மிகவும் எளிமையாகச் செயலாற்றி வருகிறார்.

கூடவே மலையகத் தமிழ் மக்களின் கஷ்டங்களை உணர்ந்து கொண்டு அவர்களுக்குத் தனித்தனியாக வீடமைத்துக் கொடுப்பதிலும் அவர்களின் நாளாந்த சம்பளத்தை 1750 ரூபாயாக அதிகரித்துக் கொடுப்பதிலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் அவரை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மீட்பராக்கி உள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவின் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிவேகமாக உயர்ந்து வருகிறது.

ஜனாதிபதி அநுரவை ஒரு தடவை பார்த்து விட வேண்டுமென நாட்டு மக்கள் நினைக்கு மளவுக்கு அவரின் அணுகுமுறைகள் ஒட்டுமொத்த மக்களையும் ஈர்த்துள்ளன.

இதனால் தங்களின் எதிர்கால அரசியல் சூனியமாகப் போகிறது என ஏங்கி விறைத்துப் போயுள்ள எதிர்க்கட்சிகள்; என்ன பாடுபட்டும் அநுர அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றன.

இவர்களுடன் இன – மத வாதத்தில் ஊறித் திளைத்து உண்டுகளித்த புத்த பிக்குகள் சிலர் மதவாதத்தைத் தூண்டிவிடுவதில் தீவிரமாக உள்ளனர். அவர்களின் அத்தகையதொரு செயற்பாடே திருகோணமலைக் கடற்கரையில் புத்தர் சிலை நிறுவப்பட்ட செயலாகும்.

ஆம், திருகோணமலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதன் மூலம் கிழக்கில் மதக் கலவரத்தை ஏற்படுத்தி, அதனை நாடு முழுமைக்கும் பரப்புவதென அவர்கள் போட்ட திட்டம் அரங்கேறவில்லை.

அதேநேரம் புத்தபிக்குகள் சிலர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சென்று, கண்ணீர்விட்டு அழுகின்றனர். உங்களுடைய ஆட்சியில் நாங்கள் எத்துணை கௌரவமாக இருந்தோம். ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் நாங்கள் முதுகெலும்பை இழந்துவிட்டோம் எனக் கூறிப் புலம்புகின்றனர்.

இந்தப் புலம்பலானது மதவாதம் கொண்ட பௌத்த துறவிகள் மூலம் நாட்டில் கலவரத்தைத் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டது.

இதற்கான பூர்வாங்கக் கிரியையாக கடந்த 17ஆம் திகதி திருகோணமலையில் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் பௌத்த பிக்குகளுக்கு விருந்து வழங்கப்பட்டது.

அந்தோ கொடுமை! தங்களுக்கு சட்ட ரீதியாகக் கிடைக்கப் போகும் தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, மதவெறி கொண்ட புத்தபிக்குகள் மூலம் மீண்டும் இன – மத கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களின் குருதியைக் குடிக்க எத்தனிக்கும் கொடியவர்களின் கொடுஞ்செயலை ஒட்டுமொத்த மக்களும் சேர்ந்து வேரறுக்க வேண்டும்.

# திருமலையில் அரங்கேறிய சம்பவம் புத்தரைக் கைது செய்ததற்குச் சமம்

## அநுர அரசு மீது கம்மன்பில கடும் சீற்றம்

இலங்கையின் வரலாற்றில் புத்தர் சிலையைக் கைது செய்த முதல் ஆட்சியாளராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சாதனை படைத்துள்ளார்.

புத்தரைக் கைது செய்வதற்கு சமமாக இடம் பெற்ற இந்தச் சம்பவத்தால் ஒட்டுமொத்த பௌத்த சமூகமும் அதிர்ச்சியடைந்துள்ளது எனப் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (19) புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

திருகோணமலை புத்தர்சிலைச் சம்பவம் 21 ஆம் திகதி பேரணியை வெற்றிபெறச் செய்வதற்காக நாங்கள் செய்த ஒரு தந்திரம் என்று ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறெனில் பிக்குகளைத் தாக்கி புத்தர் சிலையை அகற்றுவதற்குப் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியது நாங்களா?

உண்மையில் இலங்கை வரலாற்றில் புத்தர் சிலையைக் கைது செய்த முதல் ஆட்சியாளராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சாதனை படைத்துள்ளார்.

ஒட்டுமொத்த பௌத்த சமூகமும் அதிர்ச்சியடைந்த ஒரு சம்பவமாக இந்த திருகோணமலை விவகாரம் பதிவாகியுள்ளது.

நாட்டை ஆட்சி செய்த ஏகாதிபத்திய வாதிகள்கூட பௌத்த மதத்தை இவ்வளவு அவமானப்படுத்தவில்லை என்பதை நாங்கள் மிகவும் வேதனையுடன் நினைவுபடுத்த விரும்புகிறோம் என்றார். (ம-7)

## போதைவஸ்து ஒழிப்புத் திட்டத்தால் மண்ணெண்ணெய் பட்ட சாரை போல் கலக்கத்தில் எதிரணியினர்

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்கும்போது மண்ணெண்ணெய் பட்ட சாரைப் பாம்பு போல் எதிர்க்கட்சியினர் கலக்கமடைகிறார்கள்.

போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை ஒருபோதும் இடைநிறுத்தப் போவதில்லை எனத் தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) புதன்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

போதைப்பொருளுக்கு எதிராகவும் பாதாளக் குழுக்களுக்கு எதிராகவும் தேசிய மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சியினர் மாத்திரம் தான் மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்பு போல் கலக்கமடைந்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் போதைப்பொருளுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகளை ஒரு போதும் இடைநிறுத்தப் போவதில்லை.

போதைப்பொருள் வர்த்தகத்திலும் பாதாளக் குழுக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தவர்கள் தான் இன்று போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நாட்டு மக்கள் இவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றார். (ம-7)

## வெள்ள நீர் வடிந்தோடும் பகுதிகளைத் தடை செய்யாதீர்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளுக்கு வெள்ளம் வடிந்தோடும் பகுதிகளில் மனிதாபிமானமின்றி மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்கள் மற்றும் மண் மேடுகளே பிரதான காரணம் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், சிலர் வெள்ள நீர் வடிந்தோடும் வாய்க்கால்கள் மற்றும் மதகுகளை அடைத்தமையால் வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். எனவே வெள்ள நீர் வடிந்தோடும் பகுதிகளைத் தடை செய்ய வேண்டாம் எனக் கோருகின்றோம் என்றார். (ம-7)

## 323 கொள்கலன்கள் குறித்து விசாரிக்க குழு நியமனம்

கட்டாயப் பௌதீக ஆய்வின்றி 323 கொள்கலன்களை விடுவித்தமை குறித்து விசாரணை மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்கவினால் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பருத்தித்துறை நகரசபையின் விசேட அமர்வு இன்று

(பருத்தித்துறை)


பருத்தித்துறை நகரசபையின் விசேட அமர்வு, தவிசாளர் வின்சென்ட் போல் டக்ளஸ் போல் தலைமையில் இன்றைய தினம் (20) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் நகரசபையின் எதிர்காலத் திட்டங்களை வகுக்கும் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் நவீன சந்தைக் கட்டடத்தொகுதியின் கீழ்த்தளத்தில் மரக்கறிச் சந்தையை அமைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு அறிக்கை குறித்தும் இவ்விசேட அமர்வில் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025**

"என் மனதில் ஆழப் பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை"



சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

04

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

"மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி" ஜனநாயகம் என்பது ஐக்கிய அமெரிக்காவின் 16ஆம் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கனின் வரைவிலக்கணமாகும். "அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சி முறை" என்று சீலர் எனும் அரசியல் அறிஞர் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துகிறார். புராதன கிரேக்கத்தில் எதென்ஸ், ஸ்பாட்டா முதலிய நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் நிலவியது. அங்கு ஒன்று கூடிய பிரஜைகள் ஆட்சி நிர்வாகம் தொடர்பான முடிவுகளை எடுத்தனர். அதாவது நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் எல்லோரும் ஒன்று கூடி முடிவெடுப்பதாகும்.

வாக்குரிமை உள்ள பிரஜைகள் ஆட்சி நடவடிக்கைகளுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும். தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சியே மேற்கொள்ளப்படுகின்றது. சனத்தொகை அதிகரித்தமை, மனித தேவைகள் அதிகரித்தமை, முதலிய காரணங்களால் நேரடி ஜனநாயகத்தை செயற்படுத்துவதும் முடியாத காரியமாகும். அதற்குப் பதிலாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் இன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மக்களாட்சி முறையின் கீழ் நாட்டில் ஆட்சி அதிகாரம் ஆனது சட்டரீதியாக குறிப்பிட்ட சில வகுப்பினரிடம் அல்லது ஒரு அமைப்பினரிடம் இருப்பதில்லை. அது சமூகத்தில் உள்ள சகல அங்கத்தவர்களிடமும் இருக்கின்றது. இந்நிலையில் இப் பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலில் முக்கியத்துவம் பெறுவது யாதெனில் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு அவர்கள் சார்பாக அரசியல் நிர்வாகத்தை கொண்டு செல்ல போகும் பிரதிநிதியைத் தெரிவு செய்வது என்பதாகும்.

ஏனெனில் அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் தன்னை தெரிவு செய்த மக்களுக்கு சரியான சேவையை வழங்க கூடியவராக இருக்க வேண்டும் என்பதாகும்.

இதேபோல் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை தெரிந்தவர்களே அவர்களது பிரச்சினையை தீர்த்து வைக்கக் கூடியதாக இருக்கும். எனவே பெண்களின் அரசியல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு பெண்களது பிரதிநிதித்துவம் என்பது நேரடி வேட்பாளர் என்ற கட்டாயம் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆனால் பிரதிநிதித்துவம் அரசியலில் பெண்களின் பங்குபற்றல் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. இந் நிலைமையானது அரசியல் நிறுவனங்களில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் என்பது இலங்கைக்கு மாத்திரம் உட்பட்ட தன்று. மிகச் சில விதிவிலக்குகள் உடன் உலகம் முழுவதுமே ஒரு பொது போக்காகவே காணப்படுகின்றது எனலாம்.

குறிப்பாக தெற்காசிய நாடுகளில் பொதுவான பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் சகல பெண்களுக்குமான நீதி, நியாயத்தையும் சமத்துவத்தையும் எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது முக்கியமானதாகும். இலங்கையில் பெண்கள் தமது உரிமைகளைக் கோரி மிகவும் ஆர்வத்துடன் போராடி வருகின்ற அதேநேரம் வாக்களிப்பு என்பதற்கு அப்பால் தமது அரசியல் சமூக நோக்கங்களை தெளிவாக எடுத்துக் காட்டுவதில் இன்று வரையில் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

தொடர்ந்தும் நாட்டின் முதல் பிரஜை என்ற எண்ணம் ஆண்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பெண்கள் ஓரங்கட்டப்பட்ட வண்ணமே உள்ளார்கள். எனினும் தற்போது பெண்கள் அரசியலில் முக்கிய இடம்பெறுவது பெண்கள் சார்ந்த முன்னேற்றத்திற்கும் வலுவூட்டும் மிகவும் அவசியமானது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரவேசம் ஆனது 1932 ஆம் ஆண்டு ஆரம்பமானது.

### பெண்கள் வாக்குரிமை (women's suffrage)

பெண்கள் வாக்குரிமை (women's suffrage) என்பது தேர்தல்களில் பெண்கள் வாக்கு அளிக்கவும், பொதுப் பணிப் பதவிகளில் பங்கேற்க வாக்கெடுப்புகள் வழியாக பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவும் கொண்டுள்ள உரிமையைக் குறிக்கிறது. பெண்கள் வாக்குரிமையைப் பரவலாக்குவதற்காக எழுந்த பொருளாதார மற்றும் அரசியல் இயக்கங்களும் இதில் அடங்கும். சொத்து இருக்கவேண்டும், வரி செலுத்த வேண்டும், திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படாமலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தும் இதில் அடங்கும்.

நவீன காலத்தில், பெண்கள் வாக்குரிமை இயக்கம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்ஸ் நாட்டில் தொடங்கியது. அந்நாட்டின் முழுமையிலும், கனடாவின் பிரெஞ்சு மொழி புழங்கிய கியூபெக் மாநிலத்திலும் பெண்களுக்கான முழு உரிமை கிடைக்க மேலும் காலம் பிடித்தது. 1860களில் சில பெண்கள் சுவீடன், பிரித்தானியா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சில மேற்கு மாநிலங்களில் வாக்களிக்க உரிமை பெற்றனர்.

பிரித்தானிய குடியேற்றப் பகுதியாக இருந்த நியூசிலாந்து, வளர்ந்த எல்லாப் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கிய முதல் நாடாக 1893 இல் சிறப்புற்றது. அருகிலிருந்த அவுஸ்திரேலியா குடியேற்றப் பகுதியில் பெண்கள் 1895 இல் வாக்களிக்க உரிமை பெற்றார்கள். மேலும், பாராளுமன்றத் தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உரிமை பெற்றார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உரிமை பெண்களுக்கு நியூசிலாந்தில் 1919 இல் தான் வழங்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் பெண்களுக்கு முதன்முதலில் வாக்களிக்கும், தேர்ந்தெடுக்கப்படும் உரிமை வழங்கப்பட்டது பின்லாந்து நாட்டில் ஆகும். அவ்வாறு உரிமை வழங்கப்பட்ட 1907 இல் பின்லாந்து ரஷ்யப் பேரரசில் தனித்தியங்கிய நாட்டுப்பகுதியாக இருந்தது. அங்கு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் உறுப்பினராக உலகிலேயே முதன் முதலாக ஒரு பெண் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வாக்குரிமை பெறுவதற்கு, பெண்கள் பல நாடுகளில் போராட வேண்டியிருந்தது. நாடு முழுவதற்கும் பொது வாக்குரிமை வழங்கப்படுவதற்கு முன்னர் இவ்வாறு போராடித்தான் பல நாடுகளில் வாக்குரிமை பெற்றார்கள். 1979இல் ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிட்ட "பெண்களுக்கு எதிரான அனைத்து வேறுபாட்டு ஒதுக்கல்களையும் ஒழித்தல் பற்றிய அறிக்கை" யின்படி, பெண் வாக்குரிமை ஒரு மனித உரிமையாகும்.

30 வயதுக்கு மேற்பட்ட பிரித்தானியப் பெண்கள் 1918இல் வாக்குரிமை பெற்றார்கள். நெதர்லாந்து பெண்களுக்கு அவ்வுரிமை 1919 இல் வழங்கப்பட்டது. அமெரிக்கப் பெண்களுக்கு வாக்குரிமை 1920இல் கிடைத்தது. துருக்கி நாட்டுப் பெண்கள் 1926இல் வாக்குரிமை பெற்றார்கள்.

21 வயது நிறைந்த, அதற்கு மேல் வயது கொண்ட ஆண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டது போல, தங்களுக்கும் வயது வரம்பு நிர்ணயிக்க வேண்டும் என்று பிரித்தானியப் பெண்கள் போராடியதைத் தொடர்ந்து, 1928இல் அந்நாட்டுப் பெண்களுக்கு அவ்வுரிமை கிடைத்தது.

வாக்குரிமை பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த, பாலினம், சொத்து, கல்வித் தகுதி போன்றவை காலப் போக்கில் மறைந்து போயின. இன்று, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நாடுகளில் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸிலிருந்து...

அதிகாலை 12.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் தூதாவளை கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த ராஜகுலேந்திரன் பிருந்தன் (வயது-29) என்ற இளைஞனே படுகொலை செய்யப்பட்டவராவார்.

நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு இளைஞனுக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்ததை அடுத்து இளைஞன் வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞன் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை இளைஞன் சடலமாக மீட்கப்பட்ட இடத்திற்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

குறித்த இரு இளைஞர்கள், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், அத்துடன் இளைஞனுக்கு வந்த தொலைபேசி அழைப்புத் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,60)

## திருகோணமலை...

தலைமை நீதிவான் எம்.என்.எம்.சம்சுதீன் நேற்று விகாராதிபதிக்கு உத்தரவிட்டார்.

திருகோணமலை பொலிஸ் கண்காணிப்பாளர் ஜே.எல். அஜித்குமார, துறைமுக பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் தலைமை ஆய்வாளர் கே.டபிள்யூ.ஜி.எஸ்.கே.சமரசிங்க ஆகியோர் முன்வைத்த உண்மைகளைப் பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

திருகோணமலையில் உள்ள டச்சு விரிகுடா கடற்கரையில் ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி விகாராதிபதி தற்காலிக கட்டிடம் கட்டுவது தொடர்பாக, கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவப் பிரிவு தாக்கல் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் நீதிமன்றத்தில் பி அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

இதன்போது முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த நீதிவான், தொடர்புடைய கட்டுமானத்தின் முன்னேற்றம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைக் குறிக்கும் அறிக்கையை 26ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு துறைமுகப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட நீதிமன்ற உத்தரவின் நகல்களை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விகாராதிபதியிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கிடையில் சம்பவம் தொடர்பாகப் பொதுமக்கள் பாதுகாப்புச் செயலாளரிடமிருந்து, ஜனாதிபதி அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தார்.

மேலும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த திருகோணமலைப் பொலிஸ் குற்றவியல் ஆய்வகத்தின் குழு ஒன்று அருகிலுள்ள பாதுகாப்பு வேலியை வெட்டி அறிவியல் ஆதாரங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## தமிழ் மக்களின்...

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு புதிய அரசியல் தீர்வு அவசியம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் மாகாண சபைத் தேர்தல் மற்றும் புதிய அரசியலமைப்பொன்றின் அவசியம் குறித்து இதன்போது ஆராயப்பட்டதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொடர்ந்தும் பழைய அரசியல் தீர்வு பொருத்தமற்றது என்பதால் அதற்காக புதிய அரசியல் தீர்வினை நோக்கிச் செல்ல வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இங்கு குறிப்பிட்டார்.

அதற்காக அனைவரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நீண்ட காலமாக பிரதேச மட்டத்தில் எதிர்கொள்ளும் மீன்பிடி மற்றும் காணிப் பிரச்சினைகள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் அபிவிருத்தித் தேவைகள் என்பன குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. பிரதிநிதிகள் முன்வைத்த சில பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்குமாறும் அதே சந்தர்ப்பத்தில் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

வடக்கு அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் எந்தவொரு திட்டத்திற்கும் தமது கட்சி ஒத்துழைப்பு வழங்கும் எனத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினர்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி சி.வி.கே. சிவஞானம் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஸ்ரீதரன், எஸ். ராசமாணிக்கம் சாணக்கியன், பி. சத்தியலிங்கம், ஜி. ஸ்ரீநேசன், ரீ.ரவிகரன், கே. கோடீஸ்வரன், கே. எஸ்.குகதாசன் மற்றும் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ம-7)

## ஐஸ் போதை...

மாமுனைக் கிராமத்தினை சுற்றிவளைத்தபோது 7.5 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை விசேட அதிரடிப்படையினர் மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

## மாவீரர் வாரம்...

நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 6018 — W 5 2 9 6 8 1
அத சம்பத — W 9 6 8 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0593

சுப தவசக — திகதி 2025.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0134 — கும்பம் 02 16 24 — 5816

தன நிதானய — திகதி - 2025.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் - 2048 — S 16 50 57 71 S

மெகா பவர் — திகதி 19/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2366 — B 11 05 59 74 75

ஜய — திகதி 2025.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0286 — A 4 9 4 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4260 — சீட்டிழுப்பு திகதி 19.11.2025 — G 08 09 36 64 — G

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1327 — மேடம் 44 52 55 57 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 19.11.2025 — வெற்றி வாரம் 0726 — ஆங்கில எழுத்து H — 0 8 3 7 2 5 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,997,130.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2992 — சீட்டிழுப்பு திகதி 2025.11.19 — தினம் புதன்கிழமை — 01 11 15 76 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,281,495.20

சனிதா — திகதி 19.11.2025 — வெற்றி வாரம் 5153 — 23 24 37 38 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,370,630.80

சசிரி — வெற்றி வாரம் 822 — சீட்டிழுப்பு திகதி 19.11.2025 — புதன்கிழமை — 02 19 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4704 — சீட்டிழுப்பு திகதி 19.11.2025 — தினம் புதன்கிழமை — 43 50 60 61 கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,213,990.00

கப்றக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — 2168 — 19.11.2025 புதன்கிழமை — C 35 30 47 53 63 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.608,339,007.80

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன் கிழமை — வெற்றி வாரம் 2818 — சீட்டிழுப்பு திகதி 2025.11.19 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,260,591.20 — 08 51 55 57 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களால் அநுர அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் கைதிகள் என்ற சொற்றொடர் இருப்பதை சுட்டிக்காட்டினார். மேலும் பாராளுமன்றத்தில் அவரது அமைச்சர்கள், அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று பேசி இருக்கின்றார்கள். அதையும் சுட்டிக்காட்டினார்.

அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "அரசியல் கைதிகள்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதை அவருக்குப் படித்தும் காட்டினார். அவர்கள் நீண்ட காலம் இருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில்தான் அவர்கள் சிறையில் இருக்கின்றார்கள். அவர்கள் குற்றவாளிகளாகக் கண்ட முறைமையே தவறு. அத்தோடு அவர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்கின்றார்கள். இவற்றைக் கவனத்தில் எடுத்து அவர்களை விரைந்து விடுவிக்குமாறு கேட்டிருந்தனர். அது குறித்துத் தான் அவதானம் செலுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## அரச சேவையில்...

பாராளுமன்றத்தில் நேற்று 2025 நடைபெற்ற பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு மசோதா மீதான குழு அமர்வுகளின் விவாதத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்களில் பட்டதாரிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய அதிக எண்ணிக்கையிலான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 12,309 பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரச சேவைக்குத் தேவையான ஆட்சேர்ப்பு மற்றும் அதன் தொடர்ச்சிக்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான இடைக்கால நடவடிக்கையாக பிரதமரின் செயலாளர் தலைமையில் அரச சேவை ஆட்சேர்ப்பு மறு ஆய்வுக் குழு நிறுவப்பட்டுள்ளது.

அந்த குழு அளிக்கும் பரிந்துரைகளை அமைச்சரவை பரிசீலித்து தேவையான ஆட்சேர்ப்புகளுக்கு அனுமதி வழங்கும் என்றும் சந்தன அபேரத்ன மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார். (ம-7)

## இனவாத...

செய்கின்றனர் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டது. திருகோணமலையில் எந்தக் காலத்திலும் புத்தர் சிலை இருக்கவில்லை. ஒரு விகாரை பக்கத்தில் இருந்திருக்கின்றது. அது சம்பந்தப்பட்ட ஒரு சின்னக் கட்டடம் அருகில் இருந்துள்ளது. அதைக் குளிர்பானம் விற்பனை செய்யும் நிலையமாக மாற்றினார்கள்.

அது அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடம். அதனை அகற்றுவதற்கு நீதிமன்ற உத்தரவு இருந்த போது, அதனை அகற்றாமல் தடுப்பதற்காக, புத்தர் சிலை புதிதாகக் கொண்டு போய் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இது நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம் என்பதைச் சுட்டிக்காட்டினர்.

திருகோணமலை விவகாரத்தை இனவாதத்தைக் கிளப்புவதற்கு எல்லாப் பக்கத்திலும் ஆட்கள் இருக்கின்றார்கள். பிக்குமார் சிலர் இங்கிருந்து அங்கு சென்று இதனை ஊதிப் பெருப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது எங்களது திடமான கருத்து. அதேவேளை எங்களுடைய மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தேவையில்லாமல் அப்படி விகாரைகளை அமைப்பது தவறு என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

உதாரணத்துக்கு திரியாயில் இரண்டே இரண்டு பௌத்தர்கள்தான் இருக்கின்றார்கள். அங்கு இரண்டு விகாரைகள் கட்டப்படுகின்றன.

குச்சவெளிப் பிரதேச செயலகத்தில் 38 விகாரைகள் புதிதாகக் கட்டப்படுகின்றன. பௌத்தர்கள் வாழும் இடத்தில் அவர்களுடைய வழிபாட்டுக்காக விகாரைகள் கட்டப்படுவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் ஓர் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் காட்டுவதற்காக அப்படிச் செய்வது இனங்களுக்கு இடையில் எந்தவித நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதை ஜனாதிபதிக்கு தமிழரசுக் கட்சியினரால் சுட்டிக் காட்டப்பட்டது. (ம-7)

## அரசின் நட...

போம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் இனவாதத்துக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவொரு தீர்மானத்துக்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி என்ற வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (ம-7)

## தீர்வு...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கட்சியின் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி பதவி ஏற்று, அதன் பின்னர் அவரது அரசும் அதிகாரத்துக்கு வந்து, ஒரு வருடத்தின் பின்னர் தான் இப்போது இந்தச் சந்திப்பு இடம்பெற்று இருக்கின்றது.

அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதலாவதாகக் கூறிய விடயம் புதிய அரசமைப்பு ஒன்று வரும் என்பதாகும். அது விரைவாக, துரிதமாக நடைமுறைக்கு வரும் என்று கூறி இருந்தார்கள். ஆனால் ஒரு வருடமாகியும் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை கூறியிருந்தோம்.

அவர் அடுத்த ஜனவரியில் இருந்து நடவடிக்கை எடுப்பார் என எங்களுக்கு உறுதியளித்திருக்கிறார்.

அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவை ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் என்று உறுதி கொடுத்திருந்தார். அதைச் சுட்டிக்காட்டினோம். அந்த உறுதிமொழியில் ஐம்பது வீதம் நடைமுறைப்படுத்தி விட்டோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி விட்டோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எங்களுக்கு இன்னும் சொற்ப காலம் தேவைப்படுவதாக அவர் கூறினார். ஆனால் நடத்துவோம் என்ற உறுதிமொழியை அவர் தந்தார். எனினும் எப்போது என்று அவர் சொல்லவில்லை.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறித்து எடுக்கப்படக் கூடாது. பொறுப்புக்கூறல் பற்றிய விடயங்கள் பற்றி எல்லாம் எடுத்துரைத்தோம்.

எங்கள் மாவட்டங்களிலேயே ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான பிரச்சினைகள் பற்றி எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். அந்த விடயங்களை எல்லாம் அவர் செவிமடுத்தார். எங்களோடு பேசினார். முக்கியமான பல விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான கட்சி என்ற முறையில் தொடர்ந்து இந்த விடயங்களை எங்களுடன் கலந்துரையாடி முன்னெடுப்பார் என அவர் உறுதியளித்திருக்கின்றார் என்றார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4372) 076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு
மானிப்பாய் வீதி முகப்புடன்கூடிய சுற்று மதில் கட்டிய 14 பரப்பு காணி தேவையான அளவுகளில் பிரித்துக் கொடுக்கப்படும். நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
யாழ்.சிற்றிபாம் (பூங்கன்றுக்கடை)
755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். (5954)

வைத்தியம்
கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை | வாதம் | வயிற்றுப்புண் | Gastrtis | அல்சர்
மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள் | அட்டாங்க யோகம் கற்கலாம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (5963)

தவறவிடப்பட்டது
198610101828 இலக்கமுடைய கலைவாணி மில் வீதி கொக்குவில் கிழக்கு எனும் முகவரியைச் சேர்ந்த எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 224 7800 இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (1720)

காணி விற்பனைக்கு
நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (5913)
071 016 9768, 076 481 1296
076 917 0364, 077 437 0882

வீடு வாடகைக்கு தேவை
நல்லூரிலிருந்து 5 km தூரத்திற்குள் வீடு தேவை. அரச உயர்மட்ட அதிகாரி தனி ஒருவருக்கு. வாடகை பேசித் தீர்மானிக்கலாம். (5959)
076 105 6343

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-
குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4371)
UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தி[illegible] ...வரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org